# குரு அஷ்டகம்

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)



ப்ரக்ஞன்

# குரு அஷ்டகம்

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)

தெளிவுரை

**ப்ரக்ஞன்**

# குரு அஷ்டகம்

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)

'குருவின் கமலப் பாதங்களில் உன் மனம் ஒன்றாவிட்டால், பிறகு என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?' – என்று மூன்று முறை பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் திரும்பத் திரும்ப சிஷ்யனுக்குச் சொல்லி, குரு பக்தியின் அவசியத்தை மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்துகிறார்.

இந்த **குரு அஷ்டகம்** எட்டு ஸ்லோகங்களைக் கொண்டது. மேலும், *'குருவின் கமலப் பாதங்களில் உன் மனம் ஒன்றாவிட்டால், பிறகு என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?'* என்ற வரிகள் பொதுவாக, இந்த எல்லா ஸ்லோகங்களின் இறுதி வரிகளாக உள்ளன.

இதிலிருந்து, பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் குருவின் ஸ்தானத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வைத்திருக்கின்றார் என்பதும், அவர்மீது அளவிட முடியாத மதிப்பு வைத்திருக்கின்றார் என்பதும் புரியும்.

சிஷ்யர்கள் குருவை அடிபணிந்து, அவருக்கு பணிவிடைகள் பல செய்து, முறையாக வேதம் படிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தி, அப்பொழுதான் அவர்களுக்கு முழுமையான 'பலன்' உண்டாகும் என்பதையும் இங்கு அறிவுறுத்துகிறார்.



# குரு அஷ்டகம்

1. சரீரம் ஸுரூபம் ததா கலத்ரம்
   யச:சாரு சித்ரம் தனம் மேருதுல்யம்மிமி
   மனஸ்சேத் ந லக்னம் குரோரங்க்ரிபத்மே
   தத:கிம் தத:கிம் தத:கிம் தத:கிம் ||

அழகான உடல், அழகான மனைவி, பார் புகழ், குறையாத செல்வம் என எல்லாம் இருந்தும், குருவின் கமலப் பாதங்களில் உன் மனம் ஒன்றாவிட்டால், பிறகு என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

2. கலத்ரம் தனம் புக்ரபௌத்ராதி ஸர்வம்
   க்ருஹம் பாந்தவா:ஸர்வ மேதத்ஹிஜாதம் |
   மனஸ்சேத் ந லக்னம் குரோரங்க்ரிபத்மே
   தத:கிம் தத:கிம் தத:கிம் தத:கிம் ||

மனைவி, செல்வம், மகன், பேரன், வீடு மற்றும் உறவினர்கள், புகழ் வாய்ந்த குடும்பத்தில் பிறப்பு என எல்லாம் இருந்தும், குருவின் கமலப் பாதங்களில் உன் மனம் ஒன்றாவிட்டால், பிறகு என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

3. ஷடங்காதி வேதோ முகே சாஸ்த்ரவித்யா
கவித்வாதி கத்யம் ஸுபத்யம் கரோதிமி
மனஸ்சேத் ந லக்னம் குரோ ரங்க்ரிபத்மே
தத:கிம் தத:கிம் தத:கிம் தத:கிம் ||

வேதத்தின் ஆறு பகுதிகளிலும் பாண்டித்தியம் பெற்றும், இலக்கியங்களில் முழுமையாகக் கரை கண்டும், கல்வி, உயர்ந்த இலக்கிய உரை நடை மற்றும் கவிதைகள் என எல்லாவற்றையும் படைக்கும் திறன் இருந்தும், குருவின் கமலப் பாதங்களில் உன் மனம் ஒன்றா விட்டால், பிறகு என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

4. விதேசேஷு§ மான்ய:ஸ்வதேசஷு§ தன்ய:
ஸதாசார வ்ருத்தேஷு§ மத்தோ ந சான்ய: |
மனஸ்சேத் ந லக்னம் குரோரங்க்ரிபத்மே
தத:கிம் தத:கிம் தத:கிம் தத:கிம் ||

அன்னிய நாடுகளில் புகழ், சொந்த நாட்டில் பெரும் செல்வம், நல்லொழுக்கத்தில் கீர்த்தி என எல்லாம் இருந்தும், குருவின் கமலப் பாதங்களில் உன் மனம் ஒன்றாவிட்டால், பிறகு என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

5. க்ஷமாமண்டலே பூப பூபாலப்ருந்தை:
ஸதா ஸேவிதம் யஸ்ய பாதாரவிந்தம்மி
மனஸ்சேத் நலக்னம் குரோ ரங்க்ரிபத்மே
தத:கிம் தத:கிம் தத:கிம் தத:கிம் ||

பூமி முழுவதையும் ஆட்சி செய்யும் அரசர்களும் உனக்கு சேவை செய்ய உன் பாதங்களில் தவம் கிடந்தாலும், குருவின் கமலப் பாதங்களில் உன் மனம் ஒன்றாவிட்டால், பிறகு என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

6. யசோ மே கதம் திக்ஷு§தானப்ரதாபாத்
ஜகத் வஸ்து ஸர்வம் கரே யத்ப்ரஸாதாத்மி
மனஸ்சேத் ந லக்னம் குரோரங்க்ரிபத்மே
தத:கிம் தத:கிம் தத:கிம் தத:கிம் ||

உன் கொடையின் காரணமாக உன் புகழ் திக்கெட்டும் பரவி, இந்த உலகத்தில் எதையும் நீ அடையும் திறன் பெற்றிருந்தாலும், குருவின் கமலப் பாதங்களில் உன் மனம் ஒன்றாவிட்டால், பிறகு என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

7. நபோகே நயோகே நவா வாஜிராஜௌ
நகாந்தா முகே நைவ வித்தேஷு§ சித்தம்வீ
மனஸ்சேத் ந லக்னம் குரோ ரங்க்ரிபத்மே
தத:கிம் தத:கிம் தத:கிம் தத:கிம் ||

சுக போகம், ராஜ்யம், மனைவி, குடும்பம், செல்வம்  ஆகியவைகளில் உன் மனம் ஈடுபடாமல் துறவற மனப்பான்மையில் மூழ்கினாலும், குருவின் கமலப் பாதங்களில் உன் மனம் ஒன்றாவிட்டால், பிறகு என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

8. அரண்யே ந வா ஸ்வஸ்ய கேஹே ந கார்யே
ந தேஹே மனோ வர்ததே மே த்வநர்க்யேவீ
மனஸ்சேத் ந லக்னம் குரோரங்க்ரிபத்மே
தத:கிம் தத:கிம் தத:கிம் தத:கிம் ||

காட்டில் அல்லது வீட்டில் வசித்தாலும், உடலை வருத்திச் செயலில் ஈடுபட்டாலும் அல்லது பெரிய சிந்தனையில் மூழ்கினாலும், குருவின் கமலப் பாதங்களில் உன் மனம் ஒன்றாவிட்டால், பிறகு என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

**பலஸ்ருதி**

குரோ ரஷ்டகம் ய:படேத் புண்யதேஹீ
யதிர்பூபதி:ப்ரஹ்மசாரீ ச கேஹீவீ
லபேத் வாஞ்சிதா ர்த்தம் பதம் ப்ரஹ்மஸம்ஜ்ஞம்
குரோருக்தவாக்யே மனோ யஸ்ய லக்னம்மிமி

சந்நியாசியோ, ராஜாவோ, பிரம்மசாரியோ அல்லது கிருஹஸ்தனோ யாராக இருந்தாலும், குருவின் போதனைகளை மனத்தில் பதிய வைத்து, இந்த ஸ்லோகங்களை பாராயணம் செய்பவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவர். அவர்கள் பிரம்மத்தை உணர்ந்த பெரிய பரிசைப் பெற்ற பாக்கியவான்களாவர்.

குரு அஸ்டகம் என்ற இந்த அற்புதமான ஸ்லோகங்களை படிப்பதின் மூலம், அதிலேயே மனம் ஒன்றி, அந்த அறிவு நிலையாகிய பிரம்ம சந்நிதானத்தில் இருக்கும் நிலையை அடையும். ஞானஸ்வரூபியான ஸ்ரீ ஆதிசங்கரரின் கமல பாதங்களை வணங்கி குருவின் அருளை அனைவரும் பெற வேண்டும்.

**ஓம் தத் ஸத்!**

# குரு அஷ்டகம்

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)



ப்ரக்ஞன்